# பள்ளிக் கல்வித் துறை

# மேல்நிலை இரண்டாமாண்டு

# கணக்குப்பதிவியல்



WWW.TAMILAGAASIRIYAR.COM

# கணக்குப் பதிவியல்
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

### அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் அதற்கு வழங்கப்படும் மதிப்பெண் விவரங்கள்

| பாடத்தலைப்பு | பகுதி அ | | பகுதி ஆ | | பகுதி இ | | பக்தி ஈ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வினா வகை | கருத்து | கணக்கு | கருத்து | கணக்கு | கருத்து | கணக்கு | கணக்கு | |
| இறுதிக் கணக்குகள் | 3 | 2 | 1 | 1 | | 1 கட்டாயம் | 1 | 47 |
| ஒற்றைப் பதிவு முறை | 3 | 1 | 1 | 1 | | 1 கட்டாயம் | 1 கட்டாயம் | 46 |
| தேய்மானம் | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | | 38 |
| விகிதாய்வு | 4 | | 1 | 1 | | 1 | 1 | 46 |
| ரொக்கத் திட்டப் பட்டியல் | 2 | | 1 | | 1 | | 1 | 39 |
| கூட்டாண்மை கணக்கு | 6 | | 1 | 2 | 1 | 1 | 1 கட்டாயம் | 65 |
| நிறுமக் கணக்கு | 4 | 1 | 1 | 1 | | 1 | 1 | 47 |
| மொத்தம் | 24 | 6 | 7 | 7 | 3 | 6 | 6 | 59 |
| மதிப்பெண் | 24 | 6 | 35 | 35 | 36 | 72 | 120 | 328 |

பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும் மதிப்பெண் மற்றும் நேர விவரம்

| பிரிவு | கொடுக்கப்படும் வினாக்கள் | மதிப்பெண் | எழுத வேண்டிய வினாக்கள் | மதிப்பெண் | காலம் |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண் | | | | | நிமிடம் |
| அ(1) | 30 | 30 | 30 | 30 | 25 |
| ஆ(5) | 14 | 70 | 10 | 50 | 45 |
| இ(12) | 8+1 அல்லது | 108 | 5 | 60 | 50 |
| ஈ(20) | 5+1 அல்லது | 120 | 3 | 60 | 60 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | 57 | 328 | 48 | 200 | 180 |

பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும் மதிப்பெண் மற்றும் நேர விவரம்

| பிரிவு | கொடுக்கப்படும் வினாக்கள் | மதிப்பெண் | எழுத வேண்டிய வினாக்கள் | மதிப்பெண் | காலம் |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண் | | | | | நிமிடம் |
| அ(1) | 30 | 30 | 30 | 30 | 25 |
| ஆ(5) | 14 | 70 | 10 | 50 | 45 |
| இ(12) | 8+1 அல்லது | 108 | 5 | 60 | 50 |
| ஈ(20) | 5+1 அல்லது | 120 | 3 | 60 | 60 |
| மொத்தம் | 57 | 328 | 48 | 200 | 180 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

# கணக்குப் பதிவியல்
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## 100% தேர்ச்சி பெற உதவும் வினாத்தாள் வடிவமைப்பு

| பாடத்தலைப்பு | பகுதி அ | | பகுதி ஆ | | பகுதி இ | | பக்தி ஈ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வினா வகை | கருத்து | கணக்கு | கருத்து | கணக்கு | கருத்து | கணக்கு | கணக்கு | |
| இறுதிக் கணக்குகள் | 2 | 2 | 1 | 1 | | 1 கட்டாயம் | 1 | 46 |
| ஒற்றைப் பதிவு முறை | 2 | 2 | 1 | 1 | | 1 கட்டாயம் | 1 கட்டாயம் | 46 |
| தேய்மானம் | 2 | 2 | | 1 | 1 | | | 21 |
| ரொக்கத் திட்டப் பட்டியல் | | | | | 1 | | 1 | 32 |
| கூட்டாண்மை கணக்கு | | | | | 1 | | | 12 |
| மொத்தம் | 6 | 6 | 2 | 3 | 3 | 2 | 3 | 59 |
| மதிப்பெண் | 6 | 6 | 10 | 15 | 36 | 24 | 60 | 157 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு – கணக்குப்பதிவியல்

பாடம் 1 இறுதிக்கணக்குகள்

## Part A

1. அடக்கவிலை அல்லது ___________ விலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச்சரக்கிருப்பு மதிப்பிடப்படும் (சந்தை விலை)
2. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் __________ பக்கம் தோன்றும் (பொறுப்புகள்)
3. முன் கூட்டிச செலுத்திய செலவுகள் இருப்பு நிலைக் குறிப்பில் _________ பக்கம் தோன்றும் (சொத்துகள்)
4. கூடியுள்ள வருமானம் இன்னமும் பெறப்படாதது இருப்புநிலைக் குறிப்பில் ________ பக்கம் தோன்றும் (சொத்துகள்)
5. முன் கூட்டிப் பெற்ற வருமானம் இருப்புநிலைக் குறிப்பில் ________ பக்கம் தோன்றும்.(பொறுப்புகள்)
6. முதல் மீது வட்டி _______ கணக்கில் பற்று வைக்கப்படும் (இலாப நட்ட கணக்கு)
7. எடுப்பு மீது வட்டி _______ கணக்கில் பற்று வைக்கப்படும் (முதல் கணக்கு)
8. இருப்புநிலைக் குறிப்பில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு ________ லிருந்து கழித்துக் காட்ட வேண்டும்(பற்பல கடனாளிகள்)
9. வாங்கிய கடன் மீதான கொடுபடவேண்டிய வட்டி இருப்புநிலைக் குறிப்பில் ________ பக்கம் தோன்றும் (பொறுப்புகள்)
10. இருப்புநிலைக் குறிப்பில் கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு ________ லிருந்து கழித்துக் காட்ட வேண்டும்(பற்பல கடனீந்தோர்)
11. இருப்புநிலைக் குறிப்பில் கடனாளிகள் மீதான வட்ட ஒதுக்கு _________ லிருந்து கழித்துக் காட்ட வேண்டும்(திடமான கடனாளிகள்)
12. பற்பல கடனாளிகளிடமிருந்து திரும்ப பெற இயலாத கடன் _______ எனப்படும்(வாராக்கடன்)
13. கணக்கியல் சூழலில் ________ தயாரிப்பு கடைசி நிலையாகும்(இறுதிக் கணக்குகள்)
14. சரிக்கட்டுதலில் இடம் பெற்றுள்ள இனங்கள் ________ இடத்தில் தோன்றும் (இரண்டு)
15. இருப்பாய்வில் உள்ள இனங்கள் ________ இடத்தில் தோன்றும் (ஒரு)
16. இறுதிச் சரக்கிருப்பு தோன்றுவது ________ (வியாபார கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு)
17. ________ அடிப்படையில் இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.(இருப்பாய்வு)
18. வருமான வரி கழிக்கப்படுவது ________லிருந்து (முதல் தொகை)
19. நிகர நட்டம் முதலிலிருந்து ________ வேண்டும்(கழிக்க)
20. எடுப்பின் மீதான வட்டி ________ உடன் கூட்டப்பட்டு முதல் தொகையில் இருந்து கழிக்கப்படவேண்டும் (எடுப்புத் தொகை)

## Part B                                                                    Marks 5

1. சரிக்கட்டு பதிவு என்றால் என்ன?அல்லது ஏன் சரிக்கட்டுப்பதிவுகள் மேற்கொள்ளவேண்டும்.

   ஒரு நிறுவனத்தில் சரிக்கட்டப்பட வேண்டிய செலவுகளும் வருமானங்களும் உள்ளன. இவை சரிக்கட்டப்படவில்லை என்றால் நிறுவனத்தின் உண்மையான செயல்பாட்டை அறிய முடியாது. இந்த சரிக்கட்டுதலுக்காக செய்யப்படும் பதிவுகள் சரிக்கட்டுப்பதிவுகள் ஆகும்
2. கொடுபட வேண்டிய செலவுகள் என்றால் என்ன?



WWW.TAMILAGAASIRIYAR.COM

கணக்காண்டிற்குரிய செலவினங்கள் அந்த கணக்காண்டில் செலுத்தப்படாமல் இருந்தால் அவை கொடுபட வேண்டிய செலவுகள் ஆகும். இது ஒரு பொறுப்பாகும்.

i) வியாபார (அ)இ/ந கணக்கில் அந்தந்த செலவுகளுடன் கூட்டப்படவேண்டும்.

ii) இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கம் தோன்றும்

பதிவு

குறிப்பிட்ட செலவு கணக்கு பற்று

கொடுபட வேண்டிய செலவு க/கு

3. முன்கூட்டி செலுத்திய செலவு என்றால் என்ன?

செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருந்தால் அவை முன்கூட்டி செலுத்திய செலவு எனப்படும்.இது ஒரு சொத்தாகும்

i) இது வியாபார (அ) இ/ந கணக்கில் பற்றுப்பக்கம் அந்தந்த செலவுகளில் இருந்து கழித்துக்காட்ட வேண்டும்.

ii) இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துக்கள் பக்கம் தோன்றும்

பதிவு

முன்கூட்டி செலுத்திய செலவு கணக்கு பற்று

குறிப்பிட்ட செலவு கணக்கு

4. பெறவேண்டிய வருமானம் என்றால் என்ன? அ) கூடி உள்ள வருமானம் என்றால் என்ன?

ஈட்டிய வருமானம் உரிய கணக்காண்டில் பெறப்படாமல் இருந்தால் அது பெறவேண்டிய வருமானம் ஆகும்.இது ஒரு சொத்தாகும்

அ) இ/ந கணக்கில் வரவு பக்கம் குறிப்பிட்ட வருவாய் உடன் கூட்ட வேண்டும்

ஆ) இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துக்கள் பக்கம் தோன்றும்

பதிவு

பெறவேண்டிய வருமானம் க/கு பற்று

அந்தந்த வருமானம் க/கு

5. முன்கூட்டி பெற்ற வருமானம் என்றால் என்ன?

வரும் ஆண்டிற்கான வருமானம் நடப்பு ஆண்டில் பெற்று இருப்பதாகும். இது ஒரு பொறுப்பாகும்.

அ) இது இ/ந கணக்கில் வரவு பக்கம் குறிப்பிட்ட வருமானத்தில் இருந்து கழிக்க வேண்டும்

ஆ) இருப்பு நிலைக்குறிப்பில் பொறுப்புகள் பக்கம் தோன்றும்

பதிவு

பெற்ற வருமானம் கணக்கு பற்று

முன்கூட்டி பெற்ற வருமானம் கணக்கு

6. வாராகடன் என்றால் என்ன?

திரும்ப பெற இயலாத கடன் வாரா கடன் எனப்படும். இது வியாபாரத்திற்கு ஒரு இழப்பாகும்.

அ) இது இ/ந கணக்கில் பற்று பக்கம் தோன்றும்

ஆ) இருப்பு நிலைக்குறிப்பில் சொத்துக்கள் பக்கம் பற்பல கடனாளிகளிடமிருந்து கழித்து காட்ட வேண்டும்

பதிவு

வாராகடன் கணக்கு பற்று

பற்பல கடனாளிகள் கணக்கு

7. பயிற்சிகணக்குகள் 5 முதல் 11 வரை போட்டுப் பார்க்கவும்

கணக்கு எண் 16, 21 போட்டுப் பார்க்கவும்

Part C 12 Marks



WWW.TAMILAGAASIRIYAR.COM

1. பயிற்சிகணக்குகள் 19 போட்டுப் பார்க்கவும்
2. அ) 31.12.2005 அன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ 90000.
சரிக்கட்டுதலில் - போக்கெழுதுக வாராக்கடன் ரூ1000
ஆ) கடனாளிகள் மீதான 5% ஒதுக்கு உருவாக்குக.
உரிய பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக
பதிவுகள்
வாராகடன் கணக்கு பற்று ரூ1000
பற்பல கடனாளிகள் கணக்கு ரூ1000
இ) இ/ந கணக்கு பற்று ரூ1000
வாராகடன் கணக்கு ரூ1000
ஈ) இ/ந கணக்கு பற்று ரூ 4450
வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ4450

பற்று இ/ந கணக்கு

| | |
|---|---|
| வாராகடன் கணக்கு ரூ1000 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ4450 | |

இருப்பு நிலைக் குறிப்பு
சொத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| | பற்பல கடனாளிகள் | 90000 | |
| | - வாராகடன் | 1000 | |
| | | 89000 | |
| | - வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 4450 | 84550 |
| | 89000X5/100=4450 | | |

Part D 20 Marks

1. முக்கியமான சரிக்கட்டுதல்கள்
அ) இறுதிச் சரக்கிருப்பு
ஆ) கொடுபட வேண்டிய செலவு
இ) முன்கூட்டி செலுத்திய செலவு
ஈ) தேய்மானம்
உ) பெறவேண்டிய வருமானம்
ஊ) முன்கூட்டி பெற்ற வருமானம்
எ) முதல் மீது வட்டி
ஏ) எடுப்பு மீது வட்டி
2. எடுத்துக்காட்டு கணக்குகள் 9,10,11 போட்டுப்பார்க்கவும்

பாடம் 2 <u>ஒற்றைப் பதிவு முறை</u>

1. நிலை அறிக்கை முறை ______ முறை எனவும் அழைக்கப்படும்(நிகர மதிப்பு முறை அ) ஒப்பிட்டு முறை)
2. ஒரு நிலை அறிக்கை _______ போன்றது (இருப்பு நிலைக்குறிப்பு)
3. ஒற்றைப் பதிவு முறையில் ______ மற்றும் ______ கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.(1. ஆள்சார் 2. ரொக்கக் க/கு


WWW.TAMILAGAASIRIYAR.COM

4. பொறுப்புக்களைவிட கூடுதலாக உள்ள சொத்துக்கள் ________ (முதல்)
5. இறுதி முதலை அறிவதற்கு ஆண்டு ______ நிலையறிக்கை தயாரிக்க வேண்டும் (இறுதியில்)
6. _______ முறை பின்பற்றப்படாமல் பராமரிக்கப்படும் ஏடுகள் முழுமைப் பெறா பதிவேடுகள் எனப்படும் (இரட்டைப்பரிவு)
7. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம் ______(சிறுவியாபாரிகள்)
8. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு ______ (மொத்த கடனாளிகள் க/கு)
9. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு _____ (மொத்த கடனீந்தோர் க/கு)
10. ஒற்றைப்பதிவு முறையில் வியாபாரத்தின் முதலினை அறிய உதவும் கணக்கு _______ (நிலை அறிக்கை)
11. பற்பல கடனீந்தோர் 1.1.2005 அன்று ரூ60000 மற்றும் 31.12.2005 அன்று ரூ65000. கடனாளருக்கு ரொக்கம் செலுத்தியது ரூ104500 எனில் கடன் கொள்முதல் ரூ________ (ரூ109500)
12. பற்பல கடனாளிகள் 1.4.2004 அன்று ரூ39500 மற்றும் 31.3.2005 அன்று ரூ49900 ரொக்கம் பெற்றது ரூ69500 எனில் அவ்வாண்டில் கடன் விற்பனை எவ்வளவு?(ரூ79900)
13. ஒற்றைப் பதிவு முறை என்பது ______ முறை ஆகும் ( விஞ்ஞான அடிப்படையற்ற)



WWW.TAMILAGAASIRIYAR.COM

Part B Marks 5

1. ஒற்றைப் பதிவு முறை வரை விலக்கணம் தருக.
   கோஹ்லர் தரும் வரை விலக்கணம் பக்கம் 86ஐ பார்க்க
2. நிகர மதிப்பு முறை என்றால் என்ன?
   ஒற்றைப் பதிவு முறையில் நிகர மதிப்பு முறை மூலம் லாபம் அ) நட்டம் கணக்கிடப்படுகிறது. சரிக்கட்டப்பட்ட இறுதி முதலுடன் தொடக்க முதல் ஒப்பிடப்பட்டு லாபம் அ) நட்டம் அறியப்படும்
   சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் = இறுதி முதல் + எடுப்பு - கூடுதல் முதல்
   சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் தொடக்க முதலை விட அதிகமாக இருந்தால் அது இலாபம். சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் தொடக்க முதலை விட குறைவாக இருந்தால் அது நட்டம்.
3. நிலையறிக்கை என்றால் என்ன?

   அ) ஒற்றைபதிவு முறையில் கணக்கேடுகள் பராமரிக்கப்படுகையில் முதலைக் கண்டறிய தயாரிக்கப்படும் அறிக்கை நிலை அறிக்கை எனப்படும்

   ஆ)நிலை அறிக்கை இருப்புநிலைக் குறிப்பை போன்றது

   இ)முதல் = சொத்துகள் - பொறுப்புகள்

4. மாற்றுதல் முறை என்றால் என்ன?
   ஒற்றைபதிவு முறையில் உள்ள பதிவுகளைக் கொண்டு வியாபாரக் கணக்கு இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரித்து நிறுவனத்தின் இலாபம் நட்டம் மற்றும் நிதி நிலையை அறிவதாகும்.
5. விடுபட்ட தொகையைக் கண்டுபிடி
   எ.கா 1 மற்றும் 2 பார்க்கவும்

6. பயிற்சிக்கணக்குகளில் 5 ,6,9 போட்டுப்பார்க்கவும்

Part C 12 Marks

1. பயிற்சிக் கணக்குகள் 15 . 16
   எ.கா கணக்குகள் 5 போட்டுப்பார்க்கவும்

Part D 20 Marks

1. பயிற்சிகணக்குகள் 28, 29 போட்டுப்பார்க்கவும்
   எ.கா கணக்குகள் 13

பாடம் 3 <u>தேய்மானக்கணக்குகள்</u>

1. ______ காலத்திற்கு பயனளிக்ககூடிய சொத்துகள் நிலைச் சொத்துகள் எனப்படும் (நீண்ட)
2. ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு அதை விற்றால் கிடைக்கக்கூடிய தொகை ______ மதிப்பு எனப்படும் (இறுதி /ஏறி)
3. சொத்தின் மொத்த அடக்க விலை மீது தேய்மானம் கணக்கீடும் ______ முறையாகும்( நேர்க்கோட்டு முறை)
4. தேய்மானம் ஏற்படுவது _________ (சொத்து தேய்வடைவதால்)
5. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது _______(இயற்கை கனிம வளங்கள்)



WWW.TAMILAGAASIRIYAR.COM

6. விடு கருவிகள் போன்ற சொத்துகள் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை _______ (மறுமதிப்பீட்டு முறை)
7. காப்பீட்டு முனைமம் முறையில் ஆண்டு தோறும் தேய்மானம் _____ ஆக செலுத்தப்படுகிறது (முனைமம்)
8. ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் ஏட்டு மதிப்பு மீது தேய்மானம கணக்கீடும் முறை _____ எனப்படும் (குறைந்து செல் மதிப்பு முறை)
9. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது ஒரு ______ (லாபம்)
10. நிலைச் சொத்தை விற்பதால் ஏற்படும் லாபம் பற்று வைக்கப்படும் கணக்கு ______( நிலைச் சொத்து கணக்கு)
11. ரூ10000மீது 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம நீக்கப்பட்டால் முதல் 3 ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம _______ (ரூ2710)

Part B　　　　　　　　　　　　　　　　Marks 5

1. பயிற்சிக்கணக்குகள் 3,5,6 போட்டுப்பார்க்கவும்
   எ.கா கணக்குகள் 1
2. எறிமதிப்பு என்றால் என்ன?
   ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு அதை விற்கும் போது கிடைக்கக் கூடிய மதிப்பை எறிமதிப்பு என்கிறோம்
3. தேய்மானம என்றால் என்ன?
   ஸ்பைசா் மற்றும் பெக்லா் அ) கார்டா் வரைவிலக்கணங்களில் ஏதேனும் ஒன்றை படிக்கவும் (பக்கம் 140)
4. தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?
   நோ்க்கோட்டு முறை
   குறைந்து செல்மதிப்பு முறை
   ஆண்டுத் தொகை முறை
   தேய்மான நிதி முறை
   காப்பீட்டு முனைம முறை
   மறுமதிப்பீட்டு முறை
5. மறுமதிப்பீட்டு முறை என்றால் என்ன?
   சொத்துகளின் ஆண்டுறுதி மதிப்பு , ஆண்டுத் தொடக்க மதிப்போடு ஒப்பிடப்பட்டு தேய்மானம் கணக்கிடப்படுகிறது. வேறுபாட்டுத் தொகை தேய்மான தொகை ஆகும். எ.கா விடுகருவிகள்.
6. வழக்கொழிவு என்றால் என்ன?
   புதிய கண்டு பிடிப்புகள், முன்னேறிய செய்முறைகள், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக சொத்துக்கள் மதிப்பிழத்தலைக் குறிக்கிறது.
7. காலப்போக்கு என்றால் என்ன?
   சொத்துக்களை பயன்படுத்தாவிட்டாலும், பருவ மாற்றம், காற்று, மழை போன்ற இயற்கைக் காரணிகளாலும் மதிப்பு குறைகிறது.
8. வெறுமையாதல் என்றால் என்ன?
   சுரங்கங்கள்இ எண்ணெய்க் கிணறுகள் போன்றவற்றிலிருந்து கனிம வளங்களைத் தொடர்ந்து வெளியே எடுப்பதால் அவை தமது மதிப்பினை இழக்கின்றன. இதுவே வெறுமையாதல் எனப்படும்.


WWW.TAMILAGAASIRIYAR.COM

Part C 12 Marks

(கட்டாயக் கேள்வி உண்டு)

1. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
   அகக் காரணங்கள் 4 இ புறக் காரணங்கள் 3 மொத்தம் 7 விரிவான விளக்கம் வேண்டும் (பக்கம் 142)
2. தேய்மானம் நீக்கப்படுவதன் தேவைகள் யாவை?
   பயிற்சிக்கணக்குகள் 9,12,18,24 போட்டுப்பார்க்கவும்
   எ.கா கணக்குகள் 9,11

பாடம் 4 <u>நிதி நிலை அறிக்கை பகுப்பாய்வு</u>

விகித ஆய்வு

1. விகிதம் ______ முன்கணிப்புக்கு உதவுகிறது (நிதியியல்)
2. இரு இனங்களுக்கு இடையேயான கணிதவியல் உறவை எண்ணிக்கை நிலையில் சொல்வது _______ ஆகும்(விகிதம்)
3. _______ சொத்துக்கள் மிக விரைவாக ரொக்க மாக்கக் கூடியவை (நடப்பு)
4. நிகர இலாபத்திற்கும் விற்பனைக்கும் இடையேயான உறவே ______ எனப்படுகிறது.(நிகர லாப விகிதம்)
5. அனைத்து வகையுடைமை விகிதங்களும் ______ ஆல் கொடுக்கப்படும்(விகிதாச்சாரம்)
6. விற்பனையிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையை கழிப்பதன் மூலம் _____ கணக்கிடலாம் (மொத்த லாபம்)
7. நீர்மை விகிதங்கள் நிறுவனத்தின் _______ நீர்மைத் தன்மையை அளவிட உதவுகிறது.(குறுகியகால)
8. வங்கி மேல் வரைப்பற்று _______ க்கு எடுத்துக்காட்டாகும் (நடப்பு பொறுப்பு)
9. நீர்மை விகிதம் ______ எனவும் அழைக்கப்படுகிறது.(விரைவு விகிதம்/அமில சோதனை விகிதம்)
10. 100% இயக்க இலாப விகிதத்தை கழித்தால் _______ விகிதம் கிடைக்கும்(இயக்க விகிதம்)
11. அனைத்து செயல்பாட்டு விகிதங்களும் _______ ஆகக் கொடுக்கப்படும்.(மடங்கு)
12. நீர்மை சொத்துக்கள் என்பது நடப்பு சொத்துக்களிலிருந்து ________ மற்றும் ______ கழித்த பின் உள்ள தொகையாகும் ( சரக்கிருப்பு, முன்கூட்டி செலுத்திய செலவுகள்)
13. நீர்மை பொறுப்புகள் என்பது நடப்பு பொறுப்புக்களிலிருந்து ______ கழித்த தொகையாகும். (வங்கி மேல்வரைப் பற்று)
14. ________ விகிதங்கள் நிறுவனத்தின் நடப்புச் செலுத்துகை திறனை அளவிடுகின்றன. (நீர்மை தன்மை விகிதங்கள்)
15. புலனாகும் சொத்துக்கள் = நிலம் +கட்டிடம் + அறைகலன்

Part B Marks 5

1. விகிதம் வரையறு.
   ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கக்கூடிய உறவினை எளிய கணிதவியல் முறையில் கூறுவது.



WWW.TAMILAGAASIRIYAR.COM

2. விகித ஆய்வின் நன்மைகள் யாவை?
    1. நிதிநிலை அறிக்கை ஆய்வில் பயனுள்ள கருவியாகும்
    2. கணக்கியல் இனங்களை எளிமையாகவும் சுருக்கமாகவும் அறிந்து கொள்ள உதவுகிறத.
    3. நிதியியல் முன்கணிப்புக்கு உதவுகிறது.
    4. இது நிறுவனத்துக்கு உள்ளே மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒப்பு நோக்கும் ஆய்வுக்கு உதவுகின்றன.
3. கணக்குகள்

   எ.கா 10,11,12,16,18

Part C 12 Marks

1. கணக்குகள்

   எ.கா 23, 26, 27

   பயிற்சி கணக்குகள் 26,27

பாடம் 5 <u>ரொக்க திட்டப் பட்டியல்</u>

1. ரொக்க திட்டப்பட்டியல் ______ எனவும் அழைக்கப்படுகிறது.(நிதிதிட்டப்பட்டியல்)
2. ரொக்க திட்டப்பட்டியல் தயாரிக்க ______ முறைகள் உள்ளன.(மூன்று)
3. ஒரு பயனுள்ள கருவியாக ரொக்க திட்டப்பட்டியல் உள்ளது. (நிதி திட்டமிடலுக்கு)
4. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின் ______ஆகும். (தொடக்க இருப்பு)
5. திட்டப்பட்டியல் என்பது ______காலத்திற்கான மதிப்பீடு ஆகும் (எதிர்காலம்)
6. ரொக்க திட்டப் பட்டியல் வெளிப்படுத்துவது ______.(பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை)
7. ரொக்க திட்டப் பட்டியலில் கையாளுவது ______ (திட்டமிட்ட ரொக்க பெறுதல்கள், செலுத்தல்கள்)
8. அறைகலன் வாங்கியது ______ க்கு எ.கா ஆகும். (ரொக்க செலுத்தல்கள்)
9. அறைகலன் விற்றது ______ க்கு எ.கா ஆகும்.(ரொக்க பெறுதல்கள்)
10. ஜனவரியில் தொடக்க ரொக்க இருப்பு ரூ8000, ரொக்க பெறுதல் ரூ12000 ரொக்க செலுத்தல்கள் ரூ5000 பிப்ரவரி மாத தொடக்க இருப்பு ______ (ரூ15000)
11. ரொக்க திட்டப்பட்டியல் ஒரு பயனளிக்கும் ______ கருவி என்று கூறலாம் (நிதி திட்டமிடும்)

Part B Marks 5

1. ரொக்க திட்டப்பட்டியல் என்றால் என்ன?

   எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் குறித்த ஒரு அறிக்கையாகும். இதனை நிதித் திட்டப்பட்டியல் எனவும் கூறலாம்.
2. ரொக்க பெறுதல்களுக்கு 5 எ.கா தருக?
    1. ரொக்க விற்பனை
    2. வாடிக்கையாளரிடமிருந்து பெறக்கூடிய தொகை
    3. வட்டி, கழிவு, பங்காதாயம் போன்ற வணிக வரவுகள்
    4. சொத்து விற்பனை
    5. பெற்ற கடன்
    6. பங்கு வெளியீட்டில் பெற்ற தொகை

3. ரொக்க செலுத்தல்களுக்கு 5 எ.கா தருக?

1. ரொக்க கொள்முதல்
2. சரக்கு அளித்தோருக்கு செலுத்தும் தொகை
3. கூலி, அலுவலக செலவுகள்
4. செலுத்த வேண்டிய வருமான வரி, வட்டி
5. சொத்துக்களை வாங்குதல்
6. பங்குகள், கடனீட்டு பத்திரங்களை மீட்டல்
7. கடனை திரும்ப செலுத்துதல்

4. ரொக்க திட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகள் யாவை?

நிலை 1: தொடக்க ரொக்க இருப்பை எடுத்துக் கொள்க
நிலை 2: அம்மாதத்திய மொத்த ரொக்க பெறுதல்களை கூட்டுக
நிலை 3: அம்மாதத்திய மொத்த ரொக்க இருப்பை கணக்கிடுக.
நிலை 4: அம்மாதத்திய மொத்த ரொக்க செலுத்தல்களை கழிக்க
நிலை 5: இறுதி ரொக்க இருப்பை காண்க

5. ரொக்க திட்டப்பட்டியல் தயாரிப்பு முறைகள் யாவை?

1. பெறுதல் செலுத்தல் முறை
2. சரிக்கட்டப்பட்ட இலாப நட்ட கணக்கு முறை
3. இருப்பு நிலை குறிக்கும் நிலை

Part C 12 Marks

1. ரொக்க திட்ட பட்டியல் என்றால் என்ன? அதன் தன்மைகள் யாவை?
2. ரொக்க திட்ட பட்டியல் தயாரிக்கும் முறைகளை விவரி?

Part D 20 Marks

1. எ.கா கணக்கு 2,3,4,5,
   பயிற்சி கணக்குகள் 6,7,8,9,10,11,12


WWW.TAMILAGAASIRIYAR.COM

பாடம் 6,7,8 (தொகுதி 2)

## கூட்டாண்மை

ஒரு மதிப்பெண் வினா – புத்தகத்தின் பின்புறம் உள்ளதை படிக்கவும்

Part B Marks 5

1. நற்பெயர் மதிப்பிடும் முறைகள் யாவை?
   1. சராசரி இலாப முறை
   2. உயர் இலாப முறை
   3. மூலதன மாக்க முறை
2. உயர் லாபம் என்றால் என்ன?
   சாதாரண இலாபத்தை விட கூடுதலாகப் பெறக்கூடிய சராசரி இலாபமே உயர் லாபம் ஆகும்
3. மறுமதிப்பீட்டு கணக்கு என்றால் என்ன?
   ஒரு கூட்டாளியை சேர்க்கும் பொழுதும் , விலகும் பொழுதும் நிறுவனத்தின் சொத்துக்களையும் பொறுப்புகளையும் மதிப்பிடு செய்வதாகும். இதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டத்தை பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் அவர்களது முதல் கணக்கில் சரிக்கட்டவேண்டும்

Part C Marks 12

1. கூட்டாண்மை உடன்பாடு இல்லாத நிலையில் செயல்படுத்த வேண்டிய கணக்கியல் விதிகள் யாவை?
2. நற்பெயரை பாதிக்கும் காரணிகள் யாவை?
3. வேறுபடுத்துக:

   ஆதாய விகிதம், தியாக விகிதம்
4. வேறுபடுத்துக
   நிலை முதல் , மாறுபடும் முதல்

## பாடம் 9 நிறுமக்கணக்குகள்

Part A

ஒரு மதிப்பெண் வினா – புத்தகத்தின் பின்புறம் உள்ளதை படிக்கவும்

Part B Marks 5

1. அழைப்பு நிலுவை என்றால் என்ன?
   பங்குதாரர்கள் சில நேரங்களில் அழைப்புத் தொகையை செலுத்த தவறி விடுவர். விடுத்த அழைப்பின் மீது பெறப்படாத தொகை அழைப்பு நிலுவை எனப்படும். அழைப்பு


WWW.TAMILAGAASIRIYAR.COM

நிலுவைத் தொகை இருப்பு நிலை குறிப்பில் அழைத்த செலுத்திய பங்கு முதலில் இருந்து கழித்துக் காட்ட வேண்டும்.

2. அழைப்பு முன்பணம் என்றால் என்ன?
விண்ணப்பதாரர்கள் பங்குகளின் மீது நிறுமம் அழைத்த தொகையை விட அதிகமாக செலுத்தினால் , மிகையாக செலுத்தப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும்

3. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?
பங்குதாரர் அழைப்புத் தொகையை செலுத்த தவறும் போதுஇ தகுந்த அறிவிப்பு கொடுத்த பின்னர் இயக்குநர்கள் பங்குகளை பங்குதாரர்களிடமிருந்து பறிமுதல் செய்வர். இதுவே பங்கு ஒறுப்பிழப்பு எனப்படும்.

4. முதலின காப்பு என்றால் என்ன?
பங்கு ஒறுப்பிழப்பு கணக்கில் உள்ள இருப்பு முதலின இலாபம் ஆகும். இது முதலின காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

## தன்னிச்சை - சுய மதிப்பீட்டுத்தேர்வு

---

1. அடக்கவிலை அல்லது ___________ விலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச்சரக்கிருப்பு மதிப்பிடப்படும் (சந்தை விலை)
2. முன் கூட்டிப் பெற்ற வருமானம் இருப்புநிலைக் குறிப்பில் ________ பக்கம் தோன்றும்.(பொறுப்புகள்)
3. நிலை அறிக்கை முறை ______ முறை எனவும் அழைக்கப்படும்(நிகர மதிப்பு முறை அ) ஒப்பிட்டு முறை)
4. பொறுப்புக்களைவிட கூடுதலாக உள்ள சொத்துக்கள் _________ (முதல்)
5. விகிதம் ______ முன்கணிப்புக்கு உதவுகிறது (நிதியியல்)
6. ரொக்க திட்டப்பட்டியல் ______ எனவும் அழைக்கப்படுகிறது.(நிதிதிட்டப்பட்டியல்)
7. நிறுமம் வெளியிடக்கூடிய அதிகப்பட்ச பங்கு முதல் தொகை _________
8. முழுமை பெறாத இரட்டை பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகையில் வியாபாரத்தின் முதல் தொகையை அறிய தயாரிக்கப்படும் அறிக்கை ______
9. ________ சொத்துக்கள் மிக விரைவாக ரொக்க மாக்கக் கூடியவை (நடப்பு)
10. ஆதாய விகிதம் கணக்கிடப்படுவது கூட்டாளி ______
11. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும் பொழுது நிறுமத்தின் பங்கு முதல் ______
12. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது ஒரு ______
13. காப்பு முதல் நிறுமக் ______ பொழுது மட்டுமே வெளியிடப்படும்
14. சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் தொடக்க முதலை விட குறைவாகயிருப்பின் ______ ஆகும்
15. முன் கூட்டி செலுத்திய செலவுகள் ______ஆகும்
16. ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் ஏட்டு மதிப்பின் மீது தேய்மானம் கணக்கீடும் முறை ______ஆகும்
17. முதலின காப்பு ______ லாபத்தை குறிக்கின்றது
18. _____ ஒரு புலனாகாத சொத்து, கற்பனைச் சொத்தல்ல
19. நீர்மை பொறுப்பு = நடப்பு பொறுப்பு – ______
20. தியாக விகிதம் = ______
21. சாதாரண இலாபத்தை விட கூடுதலாக பெறக்கூடிய சராசரி இலாபம் ______ ஆகும்
22. பெற வேண்டிய வருமானம் இன்னமும் பெறாதது ஒரு ______ ஆகும்
23. சரக்கிருப்பு விற்பனை விகிதம் ______ எனவும் அழைக்கப்படுகிறது
24. வெறுமையாதல் என்ற சொல் ______ உடன் தொடர்புடையது



WWW.TAMILAGAASIRIYAR.COM

25. ரொக்கத்திட்டப் பட்டியல் வெளிப்படுத்துவது _______
26. நிறுமம் பங்குகளை முகமதிப்பில் முனைமத்தில் _______ வெளியிடலாம்
27. _______ முறையில் புதிய கூட்டாளி தம் பங்கிற்காக நற்பெயர் மதிப்பிற்கு ரொக்கம் கொண்டு வருவதில்லை
28. இருப்பு நிலை குறிப்பில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு _______ லிருந்து கழித்துக் காட்டுதல் வேண்டும்
29. தொழிலில் இலாபநட்டங்களை கூட்டாளிகள் _______ விகிதத்தில் பங்கிட்டுக் கொள்கின்றனர்.
30. இரு அழைப்புகளுக்கு இடையே இருக்க வேண்டிய கால இடைவெளி _______
31. ஒரு நிலையறிக்கை _______ ஐ போன்று தோற்றமளிக்கும்
32. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் _______ அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்
33. முழுமை பெறாத பதிவேடுகளை பொதுவாக பயன்படுத்தும் நிறுவனம் _______
34. கொடுபட வேண்டிய செலவுகள் ஒரு_______ ஆகும்
35. பற்பல கடனாளிகளில் இருந்து திரும்ப பெற இயலாத கடன் _______ஆகும்
36. விடுகருவிகள் போன்ற சொத்துகளின் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை _______
37. கூட்டாளிகளின் _______ கணக்குகள் பற்றிருப்பு அல்லது வரவு இருப்பைக் காட்டும்
38. அட்டவணை A யின் படி அழைப்பு நிலுவைக்கு கணக்கிடப்படும் வட்டி _______ % ஆகும்
39. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு_______
40. அழைப்பு நிலுவை இருப்புநிலை குறிப்பில் _______ லிருந்து கழித்து காண்பிக்கவேண்டும்
41. குத்தகைகள் மீது தேய்மான கணக்கிட _______ முறை பயன்படுத்தப்படுகிறது
42. பொது வெளியீடு _______ நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை
43. ஒரு நிறுமத்தின் குறும ஒப்பமாக வெளியிடப்பட்ட பங்கு முதலில் _______%பெற்றிருக்க வேண்டும்
44. ஒரு நிறுமம் விடுக்கக்கூடிய அதிகப்பட்ச அழைப்புக்களின் எண்ணிக்கை_______
45. பதிவுறா பொறுப்பினை ஏடுகளில் கொணர்வது _______ இனமாகும்
46. உடன்பாடு இல்லாத நிலையில் கூட்டாளி ஒருவர் அந்நிறுவனத்திற்கு வழங்கிய கடனுக்கு _______% வட்டி வழங்கப்பட வேண்டும்
47. இந்திய கூட்டாண்மை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _______
48. புதிய கூட்டாளியை சேர்க்கையில் _______ விகிதம் கணக்கிடப்படுகிறது
49. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ரூ 10 மதிப்புள்ள 200 பங்குகளை இறுதி அழைப்பு பணம் (பங்கொன்றுக்கு ரூ 3) பெறப்படாமைக்காக ஒறு பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் ரூ1600க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன எனில் முதலின காப்பிற்கு மாற்றப்படும் தொகை _______ ஆகும்
50. ஒரு நிறுமம் ரூ10 மதிப்புள்ள 200000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியீட்டது. 150000 பங்குகள் மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டனர்.அந்நிறுமத்தின் ஒப்பிய முதல் ரூ_______


WWW.TAMILAGAASIRIYAR.COM

விடைகள்

1. சந்தை
2. பொறுப்புகள்
3. நிகர மதிப்பு முறை
4. முதல்
5. நிதியியல்
6. நிதி திட்டப்பட்டியல்
7. பெயரளவு முதல்
8. நிலை அறிக்கை
9. நடப்புச் சொத்துக்கள்
10. கூட்டாளி விலகலில்
11. குறையும்’
12. இலாபம்
13. நிறும கலைப்பின்
14. நட்டம்
15. சொத்துக்கள்
16. குறைந்து செல் மதிப்புமுறை
17. முதலின இலாபம்
18. நற்பெயர்
19. வங்கிமேல்வரைப்பற்று
20. பழைய இலாப விகிதம் - புதிய இலாப விகிதம்
21. உயர் இலாபம்
22. சொத்தாகும்
23. மொத்த சரக்கிருப்பு விற்பன விகிதம்
24. இயற்கை கனிம வளங்கள்
25. பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
26. தள்ளுபடியில்
27. மறுமதிப்பீட்டு முறை
28. கடனாளிகள்
29. ஒப்புக்கொண்ட
30. 1 மாதம்
31. இருப்புநிலைக் குறிப்பு
32. நிலை முதல்
33. சிறு வியாபார அமைப்புகள்
34. பொறுப்புகள்
35. வாராக்கடன்
36. மறு மதிப்பீடு
37. நடப்புக்கணக்கு
38. 5%
39. மொத்த கடனாளிகள் கணக்கு
40. அழைத்த செலுத்திய பங்கு முதலிலிருந்து
41. ஆண்டு தொகை முறை
42. 10நாட்கள்
43. 90%
44. 3
45. நட்டஇனம்
46. 6%
47. 1932
48. தியாக விகிதம்



WWW.TAMILAGAASIRIYAR.COM

49. ரூ1000
50. ரூ1500000

பயிற்சித்தாள்

| வரிசை எண் | விடைகள் | வரிசை எண் | விடைகள் |
|---|---|---|---|
| 1 | | 26 | |
| 2 | | 27 | |
| 3 | | 28 | |
| 4 | | 29 | |
| 5 | | 30 | |
| 6 | | 31 | |
| 7 | | 32 | |
| 8 | | 33 | |
| 9 | | 34 | |
| 10 | | 35 | |
| 11 | | 36 | |
| 12 | | 37 | |
| 13 | | 38 | |
| 14 | | 39 | |
| 15 | | 40 | |
| 16 | | 41 | |
| 17 | | 42 | |
| 18 | | 43 | |
| 19 | | 44 | |
| 20 | | 45 | |
| 21 | | 46 | |
| 22 | | 47 | |
| 23 | | 48 | |
| 24 | | 49 | |
| 25 | | 50 | |


WWW.TAMILAGAASIRIYAR.COM

Date : Marks :

Time Taken :

# கணக்குப்பதிவியல்

## மாதிரி வினாத்தாள் - 1

**பகுதி-அ**

**குறிப்பு: (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

**(2) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன**

**அ.கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் . . . . . பக்கத்தில் தோன்றும்.
2. பற்பல கடனாளிகளிடமிருந்த திரும்பப் பெற இயலாத கடன் . . . . . எனப்படும்.
3. 31.03.2006 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ.5,00,000 ஆகும். ஆண்டுக்கு 6 சதவீதம் வீதம் முதல் மீதான வட்டி . . . .. ஆகும்.
4. ஒரு தொழில் நிறுமத்தின் முதல் ரூ.60,000 அதனுடைய பொறுப்புகள் ரூ.40,000 தொழிலில் அதனுடைய சொத்துக்கள் . . . . . ஆகும்.
5. சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் தொடக்க முதலை விட அதிகமாக இருப்பின். . . . ஆகும்.
6. ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு அதை விற்றால் கிடைக்கக்கூடிய தொகை. . . . . . மதிப்பு எனப்படும்.
7. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பைவிடக் குறைவாக இருந்தால் அது ஒரு ... . . ஆகும்.
8. விற்பனையிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையை கழிப்பதன் மூலம். . . . கணக்கிடலாம்.
9. ஆண்டுத் தொடக்கத்தில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.72,000 ஆண்டு இறுதியில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.48,000 எனில் சராசரி சரக்கிருப்பின் மதிப்பு. . . . .
10. . . . . . ஒரு பயனுள்ள கருவியாக ரொக்க திட்டப்படியால் உள்ளது.
11. சாதாரண இலாபத்தைவிட, சராசரி இலாபமிகுதிக்கு . . . . .என்றுபெயர்
12. பகிர்ந்து தரா நட்டம் இருப்புநிலை குறிப்பின் . . . . . பக்கத்தில் தோன்றும்.
13. பழைய இலாப விகிதத்திலிருந்து, தியாக விகிதத்தை கழித்தால் கிடைப்பது. . . . .
14. பொது வெளியீடு. . . . . நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவது இல்லை.
15. ஒரு நிறுமம், பங்கொன்று ரூ.100 மதிப்புடைய 20,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 18,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக்



WWW.TAMILAGAASIRIYAR.COM

கொண்டால், அந்நிறுமத்தின் ஒப்பிய முதல் ரூ.. . . . . . .ஆகும்.

ஆ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

16. முன்கூட்டிச் செலுத்தியள காப்பீடு. . . . . . ஆகும்.

(அ) சொத்து (ஆ) பொறுப்பு (இ) வருமானம்

17. 2006 மார்ச் 31 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.25,000

வராக்கடன் ரூ.1,000 போக்கெழுதப்பட வேண்டும். 5 சதவீதம் வீதம் வாரா மற்றும்

ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ.. . . . ஆகும்.

(அ) ரூ.1,300 (ஆ) 1,200 (இ) 1,250

18. ஒற்றைப் பதிவு முறையில் வியாபாரததின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது. .

. . . . ..ஆகும்.

(அ) வியாபாரக் கணக்கு (ஆ) இலாபம் அல்லது நட்டம் அறிக்கை

(இ) நிலைஅறிக்கை

19. 2006, ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் ரூ80000. 2007 மார்ச் 31 அன்று கடனீந்தோர் ரூ.65,000 அவ்வாண்டில்

கடனீந்தோருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.1,10,000 எனில், அவ்வாண்டின் கடன் கொள்முதல். . . .

. . . . . ஆகும்.

20. நிலைச்சொத்தை விற்பதால் ஏற்படும் இலாபம், பற்று செய்யப்படும் கணக்கு. . . .

(அ) இலாப நட்டக் கணக்கு (ஆ) நிலைச்சொத்து கணக்கு (இ) தேய்மானக்கணக்கு

21. ஒரு சொத்தின் அடக்க மதிப்பு ரூ.4,00,000 குறைந்து செல் மதிப்பு முறையில்

தேய்மானம் ஆண்டுக்கு 10சதவீதம் வீதம் நீக்கப்பட்டால் மூன்றாம் ஆண்டின் இறுதியில்

அச்சொத்தின் ஏட்டு மதிப்பு . . . . ஆகும்.

(அ) ரூ.2,91,600 (ஆ) ரூ.2,80,000(இ) ரூ.3,24,000

22. நீர்மைப் பொறுப்புகள் என்பது (அ) நடப்பு பொறுப்புக்கள்

(ஆ) நடப்புபொறுப்புக்கள் - வங்கி மேல்வரைபற்று (இ) நடப்புப்பொறுப்புக்கள் +

வங்கிமேல் வரைபற்று

23. அனைத்து செயல்பாட்டுத் தன்மை விகிதங்களும் . . . .. . ஆல் கொடுக்கப்படும்.

(அ) விகிதாச்சாரம் (ஆ) சதவீதம் (இ) மடங்கு

24. ரொக்கத் திட்டப்படியால் கையாள்வது. (அ) திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள்

(ஆ) திட்டமிடப்பட்ட ரொக்க செலுத்தல்கள் (இ)திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள்

மற்றும் செலுத்தல்கள்.

25. கூட்டாண்மையில் கூட்டாளிகள் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்வது... . விகிதத்தில்



WWW.TAMILAGAASIRIYAR.COM

(அ) அவர்களுடைய முதல் (ஆ) ஒப்புக் கொண்ட (இ) சமமாக

26. நிலை முதல் முறையில் கூட்டாளிளின் இலாபப் பங்கு பதியப்படுவது . . . . .

(அ) நடப்புக் கணக்கில் (ஆ) முதல் கணக்கில் (இ) எடுப்புக் கணக்கில்

27. தியாக விகதம் கணக்கிடப்படுவது.

(அ) கூட்டாண்மைக் கலைப்பில் (ஆ) கூட்டாளி விலகலில் (இ)கூட்டாளி சேர்க்கப்படுகையில்

28. ஆதாய விகதம் கணக்கிடப்படுவது. (அ) புதிய விகிதம் கழிக்க பழைய விகதம் (ஆ)பழைய விகிதம் கழிக்க புதிய விகிதம் (இ) பழைய விகிதம் கழிக்க தியாகவிகதம்

29. பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி இருப்புநிலை குறிப்பில் .. . . பக்கத்தில் தோன்றும்.

(அ) பொறுப்புக்கள் (ஆ) சொத்துக்கள் (இ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.5,000 ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறு வெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ரூ.1,000 எனில் முதலியன காப்பு ரூ.. . . . ஆகும்.

(அ) ரூ.1,000 (ஆ) ரூ.4,000 (இ) ரூ.6,000

பகுதி-ஆ

குறிப்பு: 1) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 2) அனைத்து வினாக்களுககும் சம மதிப்பெண்கள் உடையன. 3) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வென்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மகிமல் விடையளிக்கவும்.

31. கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு பற்றிக் குறிப்பு வரைக
32. நிலை அறிக்கை என்றால் என்ன?
33. தேய்மான கணக்கீட்டு முறைகள் ஐந்தினை கூறுக?
34. விகிதம் - விரைவிலக்கணம்் தருக
35. ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக
36. நற்பெயர் என்றால் என்ன?
37. அழைப்பு முன்பணம் என்றால் என்ன?
38. எடுப்புகள் மீதான வட்டி ரூ.2000க்கான சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக.
39. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

| | |
|---|---|
| தொடக்க முதல் | 70,000 |
| இறுதி முதல் | 75,000 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

கூடுதல் முதல் 17,500

எடுப்புகள் 5,000

40. பின்வரும் விவரங்களைக் கொண்டு நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| பொறி வகையின் அடக்கவிலை | ரூ.1,30,000 |
| நிறுவுவதற்கான செலவுகள் | ரூ. 20,000 |
| பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள் | |
| இறுதி மதிப்பு | ரூ. 30,000 |

41. கீழ்கண்ட விவரங்களைக் கொண்ட முதல் விற்பனை விகிதம் காண்க:

| | |
|---|---|
| விற்பனை | ரூ. 6,20,000 |
| சாதாரண பங்கு முதல் | ரூ. 1,00,000 |
| விற்பனை திருப்பம் | ரூ. 20,000 |
| கடன்கள் | ரூ. 50,000 |
| காப்புகள் | ரூ. 50,000 |

42. கமலா, விமலா என்ற கூட்டாளிகள் சமமாக இலாப நட்டம் பகிர்ந்த வருகின்றனர். கமலா 2006ம் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இடையிலும் தொடர்ந்து ரூ.1800/- எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 5 சதவீதம் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுக.

43. X மற்றும் Y என்ற கூட்டாளிகள் முறைய 3: 2 விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

44. ஜாஸ்மின் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.10 மதிப்புடைய 600 பங்குகளை இறுதி அழைப்பு ரூ.2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. இப்பங்குகளை ரூ.5400க்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.

பகுதி-இ

குறிப்பு: 1) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும், 45 வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் 2) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன. 3) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31.03.2004 அன்றைய இருப்பாய்வின்படி

பற்பல கடனாளிகள் ரூ.100000



WWW.TAMILAGAASIRIYAR.COM

சரிக்கட்டுதல்கள்:

1) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ரூ.10000
2) கடனாளிகள் மீது 5 சதவீத வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
3) கடனாளிகள் மீது 2 சதவீத தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டு பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக அல்லது (ஆ) திரு ரகுபதி என்பவர் தனது ஏடுகளை முழுமை பெற ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 01.01.2004 மற்றும் 31.12.2004 ஆகியநாட்களில் அவரது சொத்துக்களும், பொறுப்புக்களும் கீழ்கண்டவாறு இருந்தன.

| | 01.01.2004 | 31.12.2004 |
|---|---|---|
| கையில் ரொக்கம் | ரூ. 10,000 | ரூ. 15,000 |
| பற்பல கடனாளிகள் | ரூ. 80,000 | ரூ. 95,000 |
| முதலீடுகள் | ரூ. 20,000 | ரூ. 20,000 |
| அறைகலன் | ரூ. 5,000 | ரூ. 5,000 |
| பற்பல கடனீந்தோர் | ரூ. 50,000 | ரூ. 60,000 |
| சரக்கிருப்பு | ரூ. 35,000 | ரூ. 65,000 |

அவர் அவ்வாண்டில் ரூ.20,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவிற்காக ரூ.40,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2004 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

46. தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் யாவை?

47. ரொக்கத்திட்டப்பட்டியலின் தன்மைகள மற்றும் நன்மைகளை விவரி.

48. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள்யாவை?

49. சக்தி வரையறு நிறுமம் 01.04.2002 அன்று ரூ.2,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ.1,45,000க்கு விற்கப்பட்டது. ஆண்டு தோறும் 10% நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டுதோறும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப் பெறுகின்றன. இயந்திர கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. பின்வரும் விவரங்களைக் கொண்டு நடப்பு விகிதம், நீர்மை விகிதம் மற்றும் துல்லிய நேர்மை விகிதம் முதலியவற்றைக் கணக்கிடுக.

| | |
|---|---|
| ரொக்கம் | ரூ. 12,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. 20,000 |
| சரக்கிருப்பு | ரூ. 44,000 |
| கடனீந்தோர் | ரூ. 92,000 |
| கடனாளிகள் | ரூ. 1,04,000 |


WWW.TAMILAGAASIRIYAR.COM

| | | |
|---|---|---|
| வங்கி மேல் வரைப்பற்று | ரூ. | 6,000 |
| குறுகிய கால முதலீடுகள் | ரூ. | 40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. | 12,000 |

51. பாபு, சந்திரா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர்.

01.04.2005 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.60,000 ரூ.40,000

ஆகும்.முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 சதவீதம் வழங்க ஒப்புக் கொண்டு உள்ளனர்.

எடுப்புக்கு மீது வட்டி ஆண்டுக்கு 8 சதவீதம் நிர்ணயித்துள்ளனர். எடுப்புத்தொகை பாபு

ரூ.6000, சந்திரா ரூ.4000 எடுப்பு மீதான வட்டி பாபு ரூ.240 சந்திரா ரூ.160. பாபு ஆண்டுக்கு ரூ.8,400 ஊதியமாகவும் சந்திரா கழிவுக்கு முன் நிகர இலாபத்தில் 10 சதவீதம் கழிவாகவும் பெறுகின்றனர்.மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2006 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ.54,000 இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

52. ஜெம் வரையறு - நிறுமம் முற்றும் அழைக்கப் பெற்ற ரூ.10 முகமதிப்புடைய 1000 பங்குகளை இறுதி அழைப்பு ரூ.3 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 800 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்தது. தேவையான குறிப்பேட்டு பதிவுகள் தந்து பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு மற்றும் முதலின் காப்பு கணக்கு தயார் செய்க.

பகுதி - ஈ

குறிப்பு 1) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றுள் 53வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் 2) அனைத்து வினாக்களுக்கு சமமான மதிப்பெண்கள் உடையன

53. (அ) திரு.அருள் என்பவர் ஒற்றைப் பதவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். 01.04.2005 அன்று அவருடைய முதல் ரூ.5,00,000

| கூடுதல் தகவல்கள் | ரூ. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 2,50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 50,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 60,000 |
| பற்பல கடனாளிகள் தொடக்க இருப்பு | 40,000 |
| பற்பல கடனீந்தோர் தொடக்க இருப்பு | 1,83,000 |
| வியாபரச் செலவுகள் | 1,20,800 |
| நிலம், கட்டிடம் (31.03.2006) | 4,00,000 |
| அறைகலன் (31.03.2006) | 7,200 |
| இறுதி சரக்கிருப்பு | 2,60,000 |
| பற்பல கடனாளிகள் இறுதி இருப்பு | 80,000 |
| பற்பலகடனீந்தோர் இறுதி இருப்பு | 2,00,000 |
| இறுதி ரொக்க இருப்பு | 55,000 |

2006 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க (அல்லது)

ஆ) சூரியா, விஜய், விக்ரம் என்ற கூட்டாளிகள் முறையே 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31.12.2005 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

31.12.2005 ஆம் நாளையள அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு

| **பொறுப்புகள்** | **ரூ.** | **சொத்துக்கள்** | **ரூ.** |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 50,000 | கையிருப்பு ரொக்கம் | 1,36,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | பற்பல கடனாளிகள் | 58,000 |
| பொது காப்பு | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| முதல் கணக்குகள் | | அறைகலன் | 14,000 |
| சூர்யா 160000 | | கட்டிடம் | 2,00,000 |
| விஜய் 100000 | | | |
| விக்ரம் 80000 | 3,40,000 | | |
| | **4,80,000** | | **4,80,000** |

பின்வரும் பகிர்வுகளுக்கு பிறகு 2006 ஜனவரி 1 அன்று விக்ரம் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

1) நற்பெயரை ரூ.60000 என மதிப்பீடு செய்வது
2) கட்டிடத்தின் மதிப்பை ரூ.40000 மதிப்பேற்றம் செய்வது
3) அறைகலன் மீது ரூ.3000 தேய்மானம் நீக்குவது.
4) வாரா ஐயக்கடன் ஒதுக்குரூ.1000 உருவாக்குவது
5) விக்ரம் என்பவருக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக செலுத்துவது மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், ரொக்க கணக்கு புதிய கூட்டாண்மையின் இருப்பு நிலை குறிப்பு ஆகியவற்றை தயார் செய்க.

54.திரு. கார்த்திக் அவர்களின் ஏடுகளிலிருந்து 31.03.2006 அன்று எடுக்கப்பட்ட இருப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. 2006 மார்ச் 31 நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப -நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

2006 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு

| **பற்று இருப்புகள்** | **ரூ.** | **வரவு இருப்புகள்** | **ரூ.** |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,25,000 | முதல் | 2,50,000 |
| பற்பல கடனாளிகள் | 90,000 | பற்பல கடனீந்தோர் | 60,000 |
| முதலீடுகள் | 50,000 | விற்பனை | 1,60,000 |
| வாடகை | 10,000 | கழிவு பெற்றது | 10,000 |
| உள்தூக்கு கூலி | 5,000 | செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | 25,000 | | |
| பொதுச்செலவுகள் | 15,000 | | |
| ரொக்கம் | 25,000 | | |
| தொடக்க சரக்கிருப்பு | 85,000 | | |
| இயந்திரம் | 50,000 | | |
| எடுப்புகள் | 20,000 | | |
| | 5,00,000 | | 5,00,000 |

சரிக்கட்டுதல்கள்:

1) இறுதிச் சரக்கிருப்பு 1,20,000

2) கொடுபட வேண்டிய வாடகை 5,000

3) முன் கூட்டி பெற்ற கழிவு 2,000

4) இயந்திரம் மீது ஆண்டிற்கு 10% தேய்மானம் நீக்குக

5) வாராக்கடன் 2,000 போக்கெழுதுக

55. பின்வரும் இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து கணக்கிடுக

1. புற அகப் பொறுப்புக்கள் விகிதம் 2. உரிமையாளர் விகிதம்

3. நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் 4. நடப்பு விகிதம்

2005 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| **பொறுப்புக்கள்** | **ரூ.** | **சொத்துக்கள்** | **ரூ.** |
|---|---|---|---|
| பங்கு முதல் | 2,00,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 1,40,000 |
| காப்புகள் | 40,000 | பொறி மற்றும் இயந்திரம் | 80,000 |
| 6% கடனீட்டுப் பத்திரம் | 60,000 | அறைகலன் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | சரக்கிருப்பு | 40,000 |
| செலுத்தற்குரிய | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 30,000 |
| மாற்றுச்சீட்டுகள் | | | |
| | | பற்பல கடனாளிகள் | 80,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | **4,00,000** | | **4,00,000** |

கூடுதல் தகவல்: அந்த வருடத்திய விற்பனை 4,80,000

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2006 ஏப்ரல், மே, ஜீன் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| மாதம் | விற்பனை | கொள்முதல் | செலவுகள் |
|---|---|---|---|
| மார்ச் 2006 | 4,00,000 | 3,00,000 | 40,000 |
| ஏப்ரல் 2006 | 5,00,000 | 5,00,000 | 60,000 |
| மே 2006 | 6,00,000 | 3,00,000 | 70,000 |
| ஜீன் 2006 | 8,00,000 | 5,00,000 | 90,000 |

1) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும்.
2) செலவுகள் 1 மாதம் கடந்த பின் செலுத்தப்படுகிறது.
3) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் 1 மாதம்
4) ஏப்ரல் 2006ல் பெற வேண்டிய கட்டி ரூ.10,000
5) ஜீன் 2006ல் வாங்கப்பட வேண்டிய அறைகலன் ரூ.20,000
6) 01.04.2006ல் தொடக்க ரொக்க இருப்பு ரூ.60,000

57. டெக்ஸ்மோ வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 வீதம் 20,000 பங்குகளை ரூ.10 முனைமத்துடன் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ.30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ.40 (முனைமத்துடன்) |
| முதலாவது அழைப்பின் போது | ரூ.20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ.20 |

25,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. குறிப்பேட்டு பதிவுகள் தருக. மேலும் வங்கி கணக்கு. பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு தயாரிப்பதோடு இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

# கணக்குப்பதிவியல்

## மாதிரி வினாத்தாள் - 2

### பகுதி –அ

குறிப்பு: (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும் (2) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

**அ.கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அடக்கவிலை அல்லது . . . .. விலை, இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

2. வாங்கிய கடன் மீதான கொடுபட வேண்டிய வட்டி இருப்பு நிலை குறிப்பின் ... . . பக்கத்தில்



WWW.TAMILAGAASIRIYAR.COM

தோன்றும்.

3. 1.1.2005 இருப்பாய்வின் வங்கிக் கடன் ரூ.5,00,000 வட்டி வீதம் ஆண்டுக்கு 12% வட்டி செலுத்தியது ரூ.40,000, 31.12.2005 அன்று நிலுவையிலுள்ள வட்டி ரூ.. . . . . . .

4. நிலை அறிக்கை முறை . . . . .முறை எனவும் அழைக்கப்படும்.

5. பொறுப்புகளை விட கூடுதலாக உள்ள சொத்துக்கள். . . . . .

6. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட . . . . . முறை பயன்படுத்தப்படுகிறது.

7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ.80,000 அதை விற்றதில் ஏற்பட்ட நட்டம் ரூ.20,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு ரூ.. . . . .

8.. . . . . விகிதங்கள் ஒரு நிறுவனத்தின் நடப்பு நிலுவைகளைச் செலுத்தும் திறனை அளவிடுகிறது.

9. விற்ற பொருளின் அடக்கவிலை ரூ.2,00,000ஆண்டுத் தொடக்கத்தில் சரக்கிருப்பு ரூ.55,000 ஆண்டு இறுதியில் சரக்கிருப்பு ரூ.25,000 எனில்,சரக்கிருப்பு விற்பனை விகிதம். .... .. .

10. ரொக்கத் திட்டப்பட்டியல் . . . . . என்றும் அழைக்கப்படுகிறது.

11. கூட்டாளிகளின் . . . . . . கணக்குகள் வரவு இருப்பு அல்லது பற்று இருப்பை காட்டும்.

12. பதிவுறா பொறுப்பை ஏடகளில் கொணர்வது . . . . . .இனமாகும்.

13. புதிய விகிதத்திலிருந்து பழைய விகிதத்தை கழித்து கணக்கிடப்படுவது. . . . விகிதம் எனப்படும்.

14. காப்பு முதல். . . .. . . போது மட்டும் வெளியிடப்படும்.

15. ஒரு நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய 1,00,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 80,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டால், அந்நிறுமத்தின் ஒப்பாத முதல் ரூ.. . . .. ஆகும்.

2. சரியான விடையை தேர்ந்தெடுது எழுது:

16. முன் கூட்டி பெற்ற வாடகை ஒரு அ) வருமானம் ஆ)சொத்து இ) பொறுப்பு

17. இருப்பாய்வின்படி நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு ரூ.6,00,000 ஆண்டு இறுதியில் தேய்மானம் 10% நீக்கப்பட்டது எனில் நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு

அ) ரூ.6,60,000 ஆ)ரூ.5,40,000 இ)ரூ.60,000

18. கடன் கொள்முதலை அறிய உதவும் எணக்கு அ) செலுத்ததற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஆ) மொத்த கடனாளிகள் கணக்கு இ) மொத்த கடனீந்தோர் கணக்கு

19. 2005 ஏப்ரல் 1, அன்று பற்பல கடனாளிகள் ரூ.1,00,000 2006 மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் ரூ.80,000 அவ்வாண்டில் பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.1,60,000 எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை . . . . . ஆகும்.

அ) ரூ.2,40,000 ஆ) 1,40,000 இ) 1,60,000



WWW.TAMILAGAASIRIYAR.COM

20. குறைந்த செல் இருப்பு முறையில் தேய்மானம்

அ) ஆண்டுதோறும் குறையும் ஆ) ஆண்டுதோறும் அதிகமாகும் இ) ஆண்டுதோறும் நிலையாக இருக்கும்

21. தேய்மானத் தொகை ரூ.45,000 சொத்தின் அடக்கவிலை ரூ.5,00,000 எனில் தேய்மான விகிதம். ஆ) 7% ஆ) 8% இ) 9%

22. பின்வருவனவற்றில் எது சரியானது?

அ புலனாகும் சொத்துக்கள்= நிலம் +கட்டிடம் + அறைகலன்

ஆ) புலனாகும் சொத்துக்கள் = நிலம் + கட்டிடம் + நற்பெயர்

இ) புலனாகும் சொத்துக்கள் = நிலம் + அறைகலன் + நற்பெயர் + பதிப்புரிமை

23.. . . . என்பது எளிதாக ரொக்கமாக்கக்கூடிய சொத்துக்கள் ஆகும்.

அ) நிலைச் சொத்துக்கள் ஆ) புலனாக சொத்துக்கள் இ) நடப்பு சொத்துக்கள்

24. ரொக்கத் திட்டப்பட்டியல் வெளிப்படுத்துவது

அ) பணம் ஆ) அலகுகளின் எண்ணிக்கை இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை

25. ஒவ்வொரு மாத இடையில் ஒரு குறிப்பிட்ட தொகையை எடுக்கும் பொழுது, எடுப்பு மீதான வட்டிக்குரிய காலம் . . . . .

அ) 13/24 மாதம் ஆ) 11/24 மாதம் இ) 12/24 மாதம்

26. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது பகிர்ந்து தரப்படாத இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவது

அ) புதிய கூட்டாளி முதல் கணக்கில் மட்டும் ஆ) பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் மட்டும் இ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்குகளில்

27. ஆதாய விகிதம் கணக்கிடப்படுகிறது.

அ) கூட்டாண்மைக் கலைப்பில் ஆ) கூட்டாளி சேர்க்கப்படுகையில் இ) கூட்டாளி விலகலில்

28. உடன்பாடு இல்லாத நிலையில் கூட்டாளி ஒருவர் அந்நிறுவனத்திற்கு வழங்கிய கடனுக்கு . . . . வட்டி வழங்கப்பட வேண்டும். அ) 6% ஆ) 10% இ) 12 %

29. நிறுமம் விடுக்கக்கூடிய அதிகபட்ச அழைப்புக்களின் எண்ணிக்கை

அ) ஒன்றாகும் ஆ) இரண்டாகும் இ) மூன்றாகும்.

30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.500 ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறு வெளியீடு செய்த வகையில் நட்டம் ரூ.200 எனில் முதலியன காப்பு ரூ.

அ) ரூ.200 ஆ) ரூ.300 இ) ரூ.500

## பகுதி –ஆ



WWW.TAMILAGAASIRIYAR.COM

குறிப்பு எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 2) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 3) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. வாரா ஐயக்கடன் ஒதுக்கு பற்றி குறிப்பு வரைக?

32. மாற்றுதல் முறை என்றால் என்ன?

33. ஆண்டுத் தொகை முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன?

34. இயக்க விகிதம் பற்றி குறிப்பு வரைக.

35. ரொக்கத் திட்டப் பட்டியல் தயாரிக்க பயன்படுத்தும் முறைகள் யாவை?

36. உயர் இலாப முறை மூலம் நற்பெயர் மதிப்பை கணக்கிடல் என்றால் என்ன?

37. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன?

38. முதல் மீதான வட்டி ரூ.5000 எனில் சரிக்கட்டு பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக?

39. விடுபட்ட தொகையை காண்க.

| | |
|---|---|
| எடுப்புகள் | ரூ.1,50,000 |
| கூடுதல் முதல் | ரூ. 30,000 |
| தொடக்க முதல் | ரூ.3,00,000 |
| அவ்வாண்டில் பெற்ற இலாபம் | ரூ. 40,000 |
| இறுதி முதல் | ? |

40. வசந்த் வரையறு நிறுமம் ரூ.1,25,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதன் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள், இறுதி மதிப்பு ரூ.25,000 ஆகும். நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு புறு அகப் பொறுப்புகள் விகதத்தைக் கணக்கிடுக

| | | |
|---|---|---|
| சாதாரண பங்கு முதல் | ரூ. | 3,00,000 |
| வங்கிக் கடன்கள் | ரூ. | 2,00,000 |
| 6% கடனீட்டுப் பத்திரம் | ரூ. | 5,00,000 |
| காப்புகள் | ரூ. | 50,000 |

42. நற்பெயரின் மதிப்பு கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆகஸ்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடுக. கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள்:

| | | |
|---|---|---|
| 2001 | ரூ. | 15,000 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | | |
|---|---|---|
| 2002 | ரூ. | 22,000 |
| 2003 | ரூ. | 38,000 |
| 2004 | ரூ. | 18,000 |
| 2005 | ரூ. | 17,000 |

43.X,Y என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர்.அவர்கள் Z என்பரை கூட்டாண்மையில் 1/6 இலாபபங்கு தர இசைந்து கொண்டனர். அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகதம் கணக்கிடுக.

44. சுமதி வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 50,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது குறிப்பேட்டு பதிவினை தருக.

பகுதி-இ

குறிப்பு எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 2) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 3) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) 31.03.2005 அன்றைய இருப்பாய்வின்படி

1) பற்பல கடனாளிகள் ரூ.56,000

2) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன்ட ஒதுக்கு உருவாக்குக.

3) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. சரிக்கட்டு பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக. அல்லது

ஆ) திரு. குமார் அவர்கள் 2005 ஏப்ரல் 1, அன்று ரூ.2,15,000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் தனது சொந்த உபயோகத்திற்காக மாதம்ரூ.2,000 வீதம் திரும்ப எடுத்துக் கொண்டார்.

அந்நிதியாண்டில் அவர் இட்ட கூடுதல் முதல் ரூ.25,000 2006 மார்ச் 31 அன்று அவரது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது,

| | |
|---|---|
| வங்கி இருப்பு | 10,000 |
| சரக்கிருப்பு | 95,000 |



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | |
|---|---|
| பற்பல கடனாளிகள் | 65,000 |
| இயந்திரம் | 35,000 |
| கையிருப்பு ரொக்கம் | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | 20,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 2,000 |

அவர் தனது ஏடுகளை ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2005-06ஆம் ஆண்டிற்கான அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் காண்க.

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.

47. ரொக்கத் திட்டப்பட்டியல் என்றால் என்ன? ரொக்க பெறுதல்கள் மறறும் ரொக்கச் செலுத்தல்கள் ஒவ்வொன்றிற்கும் நான்கு உதாரணங்கள் தருக.

48. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

49. பாலாஜி வரையறு நிறுமம் 2001 அக்டோபர் 1 அன்று ரூ.3,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. ஆண்டுக்கு 10% வீதம் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. அவ்வியந்திரம் பயனற்றுப் போனதால் 31.03.2004 அன்று ரூ.2,00,000க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் மார்ச் 31 அன்று கணக்குகள் முடிக்கப்படுகின்றன எனக் கொண்டு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு மொத்த இலாப விகிதம், சரக்கிருப்பு விற்பனை விகிதம், கடனாளிகள் விற்பனைவிகிதம் ஆகிவற்றை கணக்கிடுக.

| | |
|---|---|
| விற்பனை | 3,00,000 |
| விற்ற பொருட்களின் அடக்கவிலை | 2,40,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 58,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 62,000 |
| கடனாளிகள் | 30,000 |

51. மோகன், முருகன் என்ற கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிந்து வருகின்றனர்.

2002 ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல்கள் முறையே ரூ.80,000 மற்றும் ரூ.60,000 பின்வரும் சரிக்கட்டுதல்களுக்கு முன் 2003 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான அந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.30,000 மோகன், முருகன் இருவரும் முறையே ரூ.6,000 மற்றும் ரூ.4,000 தங்களது சொந்த உபயோகத்திற்காக திரும்ப எடுத்தனர். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பனவற்றிற்கு வகை செய்கிறது.

1) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6%
2) எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 8%
3) மோகன், முருகன் இருவரும் முறையே ஆண்டுக்கு ரூ.5,000 ஊதியம் பெறுகின்றனர்.

இலாப நட்ட பகிர்வு கணக்கையும் கூட்டாளிகள் முதல் கணக்குகளையும் காட்டுக.

52. எவரெஸ்ட் வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள், ஒவ்வொன்றும் ரூ.100 முகமதிப்புடைய 500 சாதாரண பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை ரூ.30 மற்றும் இறுதி அழைப்புத் தொகை



WWW.TAMILAGAASIRIYAR.COM

ரூ.10 செலுத்தப்படாததால் அவற்றை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில 300 பங்குகள் மட்டும் ரூ.70 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்யப்பட்டன.

தேவையான குறிப்பேட்டு பதிவுகள் தந்து, பங்கு ஒறுப்பிழப்பு கணக்கையும், முதலினக் காப்பு கணக்கையும் தயாரிக்க.

## பகுதி - ஈ

குறிப்பு எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் இவற்றுள் 53வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் 2) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன.

53. அ) திரு.ஜான் என்பவர் முழுமை பெறா இரட்டைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்கண்ட விவரங்களிலிருந்து 31.03.2002ம் நாளன்றைய வியாபார, இலாப நட்டக் கணக்கும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பும் தயாரிக்க.

| | 1.4.2001 | 31.3.2002 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| சரக்கிருப்பு | 75,000 | 37,500 |
| இயந்திரம் | 7,500 | 7,500 |
| ரொக்கம் | 18,750 | 30,000 |
| பற்பல கடனாளிகள் | 1,87,500 | 2,62,000 |
| பற்பகல கடனீந்தோர் | 1,12,500 | 1,31,250 |

| மற்ற விவரங்கள்: | ரூ. |
|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,05,000 |
| கடனீந்தோர்க்கு செலுத்திய ரொக்கம் | 3,37,500 |
| விற்பனைத் திருப்பம் | 11,250 |
| கொள்முதல் திருப்பம் | 3,750 |
| பெற்ற தள்ளுபடி | 11,250 |
| அளித்த தள்ளுபடி | 7,500 |
| பொதுச் செலவுகள் | 26,250 |
| எடுப்புகள் | 30,000 |

அல்லது

ஆ) சேகர், சுமதி என்ற கூட்டாளிகள் முறையே 3:2 என்ற விகதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31.03.2004ம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.



WWW.TAMILAGAASIRIYAR.COM

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| செலுத்துதற்குரிழய மாற்றுச்சீட்டு | 75,000 | ரொக்கம் | 15,000 |
| கடனீந்தோர் | 1,20,000 | சரக்கிருப்பு | 30,000 |
| கடன்கள் | 1,35,000 | கடனாளிகள் | 1,50,000 |
| பொதுக்காப்பு | 45,000 | இயந்திரம் | 75,000 |
| முதல்: | | கட்டிடம் | 4,50,000 |
| சேகர் 3,00,000 | | முதலீடுகள் | 1,00,000 |
| சுமதி 2,25,000 | 5,25,000 | நற்பெயர் | 80,000 |
| | **9,00,000** | | **9,00,000** |

அவர்கள் 2004 ஏப்ரல் 1 அன்று திரு.சுந்தர் என்பவர் கீழ்காணும் சரிக்கட்டுதல்களுக்குட்பட்டு 1∴5 பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டனர்.

1) சுந்தர் ரூ.1,50,000 முதல் கொண்டு வர வேண்டும்.
2) நற்பெயர் ரூ.1,00,000 என மதிப்பிடப்பட்டு உள்ளது.
3) கட்டிடம் மீது ரூ.20,000 தேய்மானம் நீக்குவது
4) கடனீந்தோரில் ரூ.30,000 போக்கெழுதப்பட வேண்டும்.
   மறு மதிப்பீட்டுக் கணக்கு முதல் கணக்குகள், ரொக்க கணக்கு மற்றும் புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

54. கீழே தரப்பட்டுள்ள திரு.அன்பு அவர்களின் இருப்பாய்வில் இருந்து 2006 மார்ச் 31ம் நாளோடு முழுவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும் அந்நாளன்றைய இருப்பு நிலை குறிப்பையும் தயார் செய்க.

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,25,000 | முதல் | 2,50,000 |
| பற்பல கடனாளிகள் | 90,000 | பற்பல கடனீந்தோர் | 60,000 |
| முதலீடுகள் | 50,000 | விற்பனை | 1,60,000 |
| வாடகை | 10,000 | கழிவு பெற்றது | 10,000 |
| உள்தூக்கு கூலி | 5,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| சம்பளம் | 25,000 | | |
| பொதுச் செலவுகள் | 15,000 | | |
| ரொக்கம் | 25,000 | | |
| தொடக்க சரக்கிருப்பு | 85,000 | | |
| இயந்திரம் | 50,000 | | |
| எடுப்புகள் | 20,000 | | |



WWW.TAMILAGAASIRIYAR.COM

| | 5,00,000 | | **5,00,000** |
|---|---|---|---|

சரிகட்டுதல்கள்:

1) இறுதிச் சரக்கிருப்பு ரூ1,20,000
2) கொடுபட வேண்டிய வாடகை ரூ5,000
3) முன் கூட்டி பெற்ற கழிவு ரூ2,000
4) இயந்திரம் மீது ஆண்டிற்கு 10% தேய்மானம் நீக்குக.
5) வாராக்கடன் ரூ2,000 போக்கெழுதுக.

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கணக்கிடுக.

1. புற அகப்பொறுப்புகள் விகிதம் 2. உரிமையாளர் விகிதம்

3. நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் 4. நடப்பு விகிதம்

2005 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| **பொறுப்புகள்** | **ரூ.** | **சொத்துக்கள்** | **ரூ.** |
|---|---|---|---|
| பங்கு முதல் | 2,00,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 1,40,000 |
| காப்புகள் | 40,000 | பொறி மற்றும் இயந்திரம் | 80,000 |
| 6% கடனீட்டு பத்திரம் | 60,000 | அறைகலன் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | சரக்கிருப்பு | 40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 30,000 |
| | | | |
| | | பற்பல கடனாளிகள் | 80,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | **4,00,000** | | **4,00,000** |

கூடுதல் தகவல் : அந்த வருடத்திய விற்பனை 4,80,000

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2006 ஏப்ரல், மே, ஜீன் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப் பட்டியலை தயாரிக்க.

| மாதம் | விற்பனை | கொள்முதல் | செலவுகள் |
|---|---|---|---|
| மார்ச் 2006 | 4,00,000 | 3,00,000 | 40,000 |
| ஏப்ரல் 2006 | 5,00,000 | 5,00,000 | 60,000 |
| மே 2006 | 6,00,000 | 3,00,000 | 70,000 |
| ஜீன் 2006 | 8,00,000 | 5,00,000 | 90,000 |

1) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும்.
2) செலவுகள் 1 மாதம் கடந்த பின் செலுத்தப்படுகிறது.
3) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் 1 மாதம்



WWW.TAMILAGAASIRIYAR.COM

4) ஏப்ரல் 2006ல் பெற வேண்டிய வட்டி ரூ.10,000
5) ஜீன் 2006ல் வாங்கப்பட வேண்டிய அறைகலன் ரூ.20,000
6) 01.04.2006ல் தொடக்க ரொக்க இருப்பு ரூ.60,000


WWW.TAMILAGAASIRIYAR.COM

57. டெக்ஸ்மோ வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 வீதம் 20,000 பங்குகளை ரூ.10 முனைமத்துடன் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ.30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ.40 (முனைமத்துடன்) |
| முதலாவது அழைப்பின் போது | ரூ.20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ.20 |

25,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. குறிபேட்டு பதிவுகள் தருக. மேலும் வங்கி கணக்கு, பங்கு முதல் கணக்கு பத்திர முனைமக் கணக்கு தயாரிப்பதோடு இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

## மாதிரி வினாத்தாள் 1 –விடைகள்

1. பொறுப்பு
2. வாராக் கடன்
3. ரூ30000
4. ரூ100000
5. இலாபம்
6. எறிமதிப்பு
7. நட்டம்
8. மொத்த இலாபம்
9. ரூ60000
10. எதிர்கால நிதி திட்டமிடுதலுக்கு
11. உயர் இலாபம்
12. சொத்து
13. புதிய இலாப விகிதம்
14. 10
15. ரூ1800000
16. சொத்து
17. ரூ1200
18. நிலை அறிக்கை
19. ரூ95000
20. நிலைச் சொத்து
21. ரூ291600
22. நடப்பு பொறுப்பு –வங்கி மேல்வரைப் பற்று
23. மடங்குகள்
24. திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
25. ஒப்புக்கொண்ட
26. நடப்புக்கணக்கில்
27. கூட்டாளி சேர்க்கப்படுகையில்
28. புதிய விகிதம் - பழைய விகிதம்
29. சொத்துக்கள் பகுதியில் தோன்றும்
30. ரூ4000


WWW.TAMILAGAASIRIYAR.COM

மாதிரி வினாத்தாள் 2 –விடைகள்

-------------------------------------------------------

1. சந்தை விலை
2. பொறுப்புகள்
3. ரூ20000
4. நிகர மதிப்பு முறை
5. முதல்
6. ஆண்டு தொகை முறை
7. ரூ100000
8. நீர்மை தன்மை விகிதங்கள்
9. 5 மடங்கு
10. நிதித்திட்டப்பட்டியல்
11. நடப்புக்கணக்குகள்
12. நட்ட இனம் ஆகும்
13. ஆதாய விகிதம்
14. நிறும கலைப்பின் பொழுது
15. ரூ200000
16. பொறுப்பு
17. ரூ540000
18. மொத்த கடனீந்தோர் கணக்கு
19. ரூ140000
20. ஆண்டு தோறும் குறையும்
21. 9%
22. நிலம் + கட்டிடம் + அறைகலன்
23. நடப்பு சொத்துகள்
24. பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
25. 12/24 மாதம்
26. பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கு
27. கூட்டாளி விலகலில்
28. 6%
29. 3
30. ரூ300



WWW.TAMILAGAASIRIYAR.COM